பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

05 11 2024 **TUESDAY** **6.45 AM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- கனடாவில் இந்து கோவில் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி கண்டனம் தெரிவித்துள்ளார்.
- சென்னையில் இன்று நடைபெறும் கடல்சார் மாநாட்டில் மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் பங்கேற்கிறார்.
- தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கப் பணிகளுக்கு தமிழக அரசு முழு ஒத்துழைப்பு வழங்கி வருவதாக மாநில நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு எ.வ. வேலு கூறியுள்ளார்.
- தமிழகத்தின் சில இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் போட்டி இன்று தொடங்குகிறது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<>>>>

கனடாவில் இந்து கோவில் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதல் கண்டனத்திற்குரியது என்று கூறியுள்ளார்.

அந்நாட்டில் உள்ள இந்திய அதிகாரிகளை மிரட்டும் முயற்சிகள் அதிர்ச்சி அளிப்பதாகவும், இத்தகைய சம்பவங்கள் இந்தியாவின் உறுதியை எந்த சூழ்நிலையிலும் சீர்குலைக்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரத்தில் கனடா அரசு நீதியை உறுதி செய்து சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்ட வேண்டும் என்று திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<>>>>

சென்னையில் இன்று நடைபெறும் கடல்சார் மாநாட்டில் மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் பங்கேற்கிறார்.

ஆங்கில வார இதழ் ஏற்பாடு செய்துள்ள இந்த மாநாட்டில், மத்திய இணையமைச்சர் திரு சாந்தனு தாக்கூர், கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகள், துறைமுகங்களை சேர்ந்த உயரதிகாரிகள், கடற்படை அதிகாரிகள் மற்றும் கப்பல் போக்குவரத்துத்துறை சார்ந்த பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

நாட்டில் உள்ள 12 பெரிய துறைமுகங்களின் மேம்பாடு இவற்றில் சரக்கு போக்குவரத்துத்திறனை மேம்படுத்துவது கப்பல் கட்டும் தொழில்துறை வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இம்மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>

இளைஞர்கள் இந்தியக் கலாச்சாரத்தை புரிந்து கொண்டு தேச ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டும் என்று தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்நாடு உள்ளிட்ட 9 மாநிலங்கள் மற்றும் 7 யூனியன் பிரதேசங்கள் உருவான தினத்தை முன்னிட்டு, ஆளுநர் மாளிகையில் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பங்கேற்றுப் பேசிய ஆளுநர், இந்தியாவின் கலாசார செழுமையைக் கொண்டாடும் வகையில் மாநிலங்களின் நிறுவன தினம் கொண்டாடப்படுவதாகக் கூறினார்.

கலாச்சார ஒருங்கிணைப்பின் பலத்தால் தான் பல ஆண்டுகாலமாக இந்தியா ஒரே தேசமாக உருவெடுத்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

ஒரே பாரதம் உன்னத பாரதம் என்ற உணர்வை பிரதமர் திரு நரேந்திர மோடி வலுப்படுத்தியுள்ளதாகவும் இந்த உணர்வுடன் இளைஞர்கள் செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

நாட்டின் ஒருமைப்பாட்டைக் குலைக்கும் முயற்சிகளுக்கு எதிராக விழிப்புடன் செயல்பட்டு ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டும் என்று திரு ஆர்.என்.ரவி கூறினார்.

<<<<>>>>

முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இன்று கோவை செல்கிறார்.

விளாங்குறிச்சி பகுதியில் 114 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப வளாகத்தை இன்று அவர் திறந்துவைக்கிறார்.

நகைத் தொழில் நிர்வாகிகளுடன் கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் கலந்துரையாடல் கூட்டத்திலும் அவர் பங்கேற்க உள்ளார்.

வீட்டுவசதி வாரியத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட நிலங்களை பயனாளிகளிடம் மீண்டும் ஒப்படைக்கும் நிகழ்ச்சியிலும் திரு மு.க.ஸ்டாலின் பங்கேற்க உள்ளார்.

<<<<>>>>

தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கப் பணிகளுக்கு தமிழக அரசு முழு ஒத்துழைப்பு வழங்கி வருவதாக மாநில நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு எ.வ. வேலு கூறியுள்ளார்.

கோவையில் மேற்கொள்ளப்பட்டுவரும் மேம்பாலப்பணிகளை நேற்று அவர் ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கத்திற்கான நிலம் கையகப்படுத்தும் பணிகள் தொடர்பாக ஆய்வுக்கூட்டங்கள் நடத்தப்பட்டு, பணிகள் விரைவுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கோவை மாவட்டத்தில் கடந்த மூன்றாண்டுகளில் மாநில நெடுஞ்சாலைத்துறை சார்பில் 658 கிலோமீட்டர் நீளத்திற்கு சாலைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இம்மாவட்டத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சாலைப்பணிகள் விரைவில் நிறைவு செய்யப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும் என்று திரு எ வ வேலு கூறினார்.

*(வாய்ஸ் பைட் - எ வ வேலு – 46 செகண்ட்ஸ்)*

<<<<>>>>

குற்றவாளிகளைப் பிடிக்கச் செல்லும் காவல்துறையினருக்கு, குறிப்பாக பெண் காவலர்களுக்கு திமுக அரசு முறையான வசதிகளை ஏற்படுத்தித் தரவில்லை என அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், உரிய வசதிகளைச் செய்து தராமல் அரசு அலட்சியத்துடன் செயல்பட்டதால் மதுராந்தகம் அருகே இரண்டு பெண் காவலர்கள் சாலை விபத்தில் சிக்கி உயிரிழந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

அவர்களுக்கு வேண்டிய வாகன வசதிகளைச் செய்து தராதது கண்டிக்கத்தக்கது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயிரிழந்த இருவரின் குடும்பங்களுக்கும் உரிய நிவாரணத்தொகை வழங்குவதுடன் இனிமேலும் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாமல் இருக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>

உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையிலேயே நீட் தேர்வு நடத்தப்படுவதாக பிஜேபி மாநில ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் திரு ஹெச் ராஜா கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நீட் தேர்வை அறிமுகம் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டது முந்தைய காங்கிரஸ் - திமுக கூட்டணி அரசுதான் என குறிப்பிட்டார்.

நீட் தேர்வு தேவையில்லை என்பவர்கள் உச்ச நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்யலாம் என்று அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் கோவில் நிதியை இந்து சமய அறநிலையத் துறை தவறாகப் பயன்படுத்தக் கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

நாட்டில் கடந்த பத்து ஆண்டுகளில் கருத்து சுதந்திரம் அதிகரித்துள்ளது என்றும், கருத்து சுதந்திரம் தடுக்கப்படுவதாக கூறுவது தவறான குற்றச்சாட்டு என்றும் திரு ஹெச் ராஜா கூறினார்.

<<<<<>>>>>

தமிழகத்தின் சில இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையை பொறுத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், ஒரு சில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே, புதுக்கோட்டை, கள்ளக்குறிச்சி, உள்ளிட்ட மாவட்டங்களில் பல்வேறு பகுதிகளில் நேற்று பரவலாக மழை பெய்துள்ளது.

<<<<<>>>>>

*__இருவரிச் செய்திகள்__*

மால்டோவா நாட்டின் அதிபர் தேர்தலில் தற்போதைய அதிபர் திருமதி மயா சந்து மீண்டும் அதிபராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

<<<<<>>>>>

இந்தோனேசியாவில் ஏற்பட்ட எரிமலை வெடிப்பால், 10 பேர் உயிரிழந்ததாக அந்நாட்டு பேரிடர் மேலமாண்மை அமைப்பு தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

ஆஸ்திரேலியா சென்றுள்ள வெளியுறவுத் துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர், அநந்நாட்டில் உள்ள பசிபிக் பகுதி மனிதாபிமான உதவிகளுக்கான சரக்குப் போக்குவரத்துக் கிடங்கைப் பார்வையிட்டார்.

<<<<<>>>>>

சர்வதேச சூரிய சக்தி கூட்டமைப்பின் புதிய தலைமை இயக்குநராக இந்தியாவின் திரு ஆஷிஷ் கண்ணா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

<<<<<>>>>

சத்பூஜை விழாவை முன்னிட்டு, தில்லியில் இருந்து நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு 22 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளதாக ரயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>

தமிழகத்தில் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து அத்துறைக்கான அமைச்சர் திரு மு.பெ. சாமிநாதன் சென்னையில் ஆய்வு மேற்கொண்டார்.

<<<<<>>>>

விளையாட்டுப் போட்டிகளின்போது மரணம் ஏற்பட்டால் நிவாரணத் தொகை வழங்குவது தொடர்பாக திட்டம் வகுக்குமாறு தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறைக்கு சென்னை உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

<<<<<>>>>

ராமநாதபுரம் மாவட்டத்தில் மீனவர்கள் குறை தீர்க்கும் கூட்டம் நாளை நடைபெறும் என்று மாவட்ட ஆட்சியர் திரு சிம்ரன்ஜீத் சிங் காலோன் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>

கந்த சஷ்டி விழாவையொட்டி நாளையும் நாளை மறுநாளும் திருச்செந்தூர் வழியாக கனரக வாகனங்கள் செல்ல தடை விதிக்கப்படுவதாக தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு ஆல்பர்ட் ஜான் கூறியுள்ளார்.

<<<<<>>>>

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் பகுதியில் பாஸ்போர்ட் விசா உள்ளிட்ட ஆவணங்கள் இன்றி தங்கி இருந்த கென்யாவைச் சார்ந்த 4 இளைஞர்களிடம் பாஸ்போர்ட் அலுவலக அதிதகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

<<<<>>>>

கடந்த அக்டோபர் மாதத்தில் சென்னையில் மெட்ரோ ரயில்களில் சுமார் 91 லட்சம் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் போட்டி இன்று தொடங்குகிறது.

சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் வரும் 11-ஆம் தேதிவரை இப்போட்டி நடைபெறவுள்ளது.

இதற்கான தொடக்க விழாவில் மாநில விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் திரு அதுல்ய மிஸ்ரா நேற்று பங்கேற்றார்.

மாஸ்டர்ஸ் மற்றும் சேலஞ்சர்ஸ் பிரிவுகளில் போட்டிகள் இன்று தொடங்குகின்றன.

மாஸ்டர்ஸ் பிரிவில் இந்தியாவின் அர்ஜுன் எரிகேசி, அமெரிக்காவின் லேவோன் ஆரோனின் உள்ளிட்ட எட்டு வீரர்களும், சேலஞ்சர்ஸ் பிரிவில் இந்தியாவின் கார்த்திகேயன் முரளி, வைஷாலி உள்ளிட்ட எட்டு வீரர்கள் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>